Harvest of paddy by force

* 77 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether 100 persons forcibly entered into the land of one Balasubramaniam, at Marudhavanam near Thiruthuraipoondi of Thanjavur district and harvested paddy;

(b) whether a complaint was lodged with the Police in this regard; and

(c) if so, the action taken thereon?

பலாத்காரமாக அறுவடை

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) தஞ்சை மாவட்ட திருத்துறைப்பூண்டியை அடுத்த மருதவனம் என்னும் ஊரில் பாலசுப்ரமண்யம் என்பவர் நிலத்தில் 100 பேர் பலாத்காரமாக நுழைந்து நெல் அறுவடை செய்தனரா?

(இ) இது பற்றி காவற்துறையினரிடம் புகார் செய்யப் பட்டதா ?

(உ) ஆமெனில், அதன் மேல் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) & (இ) ஆம்.

(உ) இந்தியத் தண்டனைச் சட்டக் கோவையின் 143, 447, 379-ம் பிரிவுகளின் கீழ் திருத்துறைப்பூண்டி காவல் நிலையத்தில் குற்ற எண் 29/68 ஆக வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. இதில சம்பந்தப்பட்டவர்கள் 1968 பிப்ரவரி 8-ம் நாளன்று கைது செய்யப்பட்டுப் பின்னர் ஜாமீனில் விடப்பட்டனர்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, இப்படி அடுத்தவர்கள் நிலத்தில் நுழைந்து பலாத்காரமாக அறுவடை செய்யும் பலாத்கார வாதிகளுக்கு ஜாமீன் கொடுப்பதால்தான் மீண்டும் அவர்கள் கூட்டத்தைக் கூட்டிக்கொண்டு வந்து பல்வேறு நேரங்களில் தகராறு செய்கிறார்கள் என்று கூறப்படுகிறது. ஆகையால் இந்த ஜாமீன் விதிகளைச் சற்றுக் கடுமையாக வைத்திருக்க அரசாங்கம் யோசிக்குமா?

THIRU D. SANTOSHAM : On a point of order, Sir Is it not a matter that is *sub judice*? The court will have to deal with the bail application and it may not be right to say in this Council that the bail should be granted or not?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மேலும் ஒரு விவரம் மேற்கண்ட சம்பவம் கிசான் போன்ற போராட்டங்களால் ஏற்பட்டதல்ல. நிலம் யாருக்குச் சொந்தம் என்பதில் பாலசுப்ரமணியம்

என்பவருக்கும் வீரசேனாபதி என்பவருக்கும் தகராறு இருந்தது. அந்த நேரத்தில்தான் இந்த சம்பவம் நிகழ்ந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டது.

திரு. என். ஆர். தியாகராஜன் : நான் கோர்ட் விவகாரங்களில் தலையிடவில்லை. கோர்ட்டில் ஜாமீன் வேண்டுமா என்று போலீசாரைக் கேட்கிறார்கள். ஜாமீனில் விடக்கூடாது என்று ஆட்சேபனை செய்தால் விடுவதில்லை. ஆனால் 90 சதவீதம் கேஸ்களில் விட்டு விடுவதில்லை. அத்தகைய ஆட்சேபனை போலீசாரிடமிருந்து தஞ்சை ஜில்லாவில் வருவதில்லை என்பதால்தான். காலையில் ஜாமீனில் போய் மாலையில் கலகத்துக்கு வருகிறார்கள். அதைப்பற்றித் தான் நான் குறிப்பிடுகிறேன் என்ற விளக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

Trespass into a Trust land

* 78 Q.—Thiru N. R. Thiagarajan : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether 400 Left Communists entered into the lands of a charitable organisation at Namasivayapuram of Nagappatinam taluk and created chaos; and

(*b*) if so, the action taken thereon by the Government?

தர்ம ஸ்தாபன நிலத்தில் நுழைந்து குழப்பம்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) நாகபட்டிணம் தாலுகா நமசிவாயபுரத்தில் ஒரு தர்ம ஸ்தாபன நிலத்தில் அண்மையில் 400 இடது சாரி கம்யூனிஸ்டுகள் நுழைந்து குழப்பம் விளைவித்தனரா ?

(இ) ஆமெனில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

Interest on loans given by the Government

* 79 Q.—Thiru N. R. Thiagarajan : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(*a*) whether the Tamil Nadu Government will reduce the rate of interest for the loans granted by the Tamil Nadu Government and for the loans disbursed to the public through Co-operative Department as the Reserve Bank has reduced the rate of interest by one per cent; and

(*b*) if so, the details thereof?